மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : 'ஆக்சிடெண்டு' என்றால் என்ன?

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, மோட்டார், பஸ் விபத்து ஒன்றுக்குத் தான் அந்த மருத்துவக் கல்லூரி பயன் படுத்தப்படுகிறது என்று கூறுகிறார்கள். ஆகவே அது சென்னைப் பக்கம் வந்துவிட்டால் பற்பல விதமான . . .

MR. CHAIRMAN : The question must be very short, Mr. Rajagopal. Don't give a lecture.

THIRU C. V. RAJAGOPAL : The Chingleput Medical College Hospital does not have much of facilities. If it is shifted to Madras, it can have more facilities to diagnose more people and all other things which are needed.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் வகைவகையான நோயாளிகளைக் கண்டு பயிற்சி பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு குறைவாக இருக்கிறது என்ற கருத்து பலமுறை அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் தொடங்கப்பட்ட கல்லூரியை எப்படி இடம் மாற்றுவது என்பது பற்றி அரசு ஆலோசித்தாக வேண்டும்.

Labour Welfare Fund

* 49 *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Labour be pleased to state the Welfare Centres set up out of the Labour Welfare Fund created by the Government during 1969–70?

தொழிலாளர் நல நிதி

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

அரசால் ஏற்படுத்தப்பட்ட தொழிலாளர் நல நிதி எந்த நலத் திட்டங்களுக்காக 1969–70-ல் வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தொழிலாளர் நல நிதியை நிர்வகிக்கும் பொருட்டு, 1971-இல் அமைக்கப்பட்ட

1972 ஆகஸ்ட் 18]

தொழிலாளர் நல வாரியம், சென்னை (2 நிலையங்கள்), மதுரை, கோயம்புத்தூர் போன்ற பெருந்தொழில் நகரங்களில் தொழிலாளர் நல நிலையங்கள் நான்கை நிறுவுவதற்கான செயற்குறிப்புகளுக்கு ஏற்பளித்துள்ளது. அந்த நல நிலையங்களில் படிப்பகம்-நூலகம், அகநிலை—புறநிலை விளையாட்டு வசதிகள், வானொலிப் பெட்டிகள், திரைப்படம் காட்டும் கருவிகள், பெண்களுக்குத் தையல் வகுப்புகள் முதலியன செய்து தரப்படும். சென்னையில் விளையாட்டரங்கம் ஒன்றும் கட்டப்படும். மூன்று நல நிலையங்கள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. ஒன்று சென்னை அம்பத்தூரில் 15-1-72 அன்றும், பிறிதொன்றும் கோயம்புத்தூரில் 19—1—72 அன்றும், மற்றொன்று மதுரையில் 21—1—72 அன்றும் தொடங்கப்பட்டது. 1969—70 இல் வாரியம் நலத் திட்டங்களுக்கு நிதி வழங்கும் கருத்து இங்கு எழவில்லை.

Labour Cell

* 50 *Q.*—Thiru V. Isvarmurti: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government for the organisation of Labour Cell in the State; and

(*b*) if so, the details thereof?

தொழிலாளர் நலக் குழு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் தொழிலாளர் நலக் குழு ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) மற்ற மாநிலங்களிலும் அயல் நாடுகளிலும் உள்ள தொழிலாளர் பிரச்சினைகளைப் பற்றிய முக்கிய புள்ளி விவரங்களைத் தொகுப்பதும், மாநிலத்தில் வெளியாகும் நாளிதழ்களில்